ௐ

# சதவர்ஷ
# கருணாகரேஸ்வரம்



மட்டக்களப்பு, கல்லடி உப்போடை

## அமரர், பிரம்மஸ்ரீ
## இ.கு.கருணாகரேஸ்வரக் குருக்கள்

**நூறாவது ஜயந்தி சிறப்பு வெளியீடு**

**04.09.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஶ தவஷ

# கா ணாகரெஶ்வர

# சதவர்ஷ

# கருணாகரேஸ்வரம்



மட்டக்களப்பு, கல்லடி உப்போடை

பாரத்வாஜ கோத்ரம்,

அமரர், பிரம்மஸ்ரீ

## இரத்தினசபாபதிக் குருக்கள்

## கருணாகரேஸ்வரக் குருக்களின்

## நூறாவது ஜயந்திச் சிறப்பு வெளியீடு

4-09-2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்



| | |
|---|---|
| நூலின் பெயர் | சதவர்ஷ கருணாகரேஸ்வரம் |
| மொழி | சம்ஸ்கிருதம், தமிழ் |
| வெளியீடு | அமரர், சிவஸ்ரீ<br>இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்கள்<br>ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினர்.<br>04 - 09 - 2011 |
| தொடர்பாடல் | சிவஸ்ரீ கருணாகர. மகேஸ்வரக் குருக்கள்<br>ஸ்ரீ காமாட்சி அம்மன் தேவஸ்தானம்,<br>ராம் நகர், மயிலம்பாவெளி<br>மட்டக்களப்பு.<br>0777663774 , 0716039898 |
| கணினி வடிவமைப்பு | பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons)<br>(கோப்பாய் சிவம்)<br>ஸ்ரீவித்யா கணினி அச்சகம்,<br>இணுவில், சுன்னாகம்.<br>தொ.பே. 021-224-1504 |
| அச்சுப்பதிப்பு | சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ்<br>கோண்டாவில்.<br>தொ.பே. 021-222-6722 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

31 + 08 + 1911



மறைவு

16 + 05 + 1991

மட்டக்களப்பு, கல்லடி உப்போடை


பாரத்வாஜ கோத்ரம்

அமரர், பிரம்மஸ்ரீ

# இரத்தினசபாபதிக் குருக்கள்
# கருணாகரேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீமதி காமாட்சி அம்மா தம்பதிகளின்
ஷஷ்டியப்த பூர்த்தியின்போது
பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பிரம்மஸ்ரீ இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்களின் கையெழுத்து மாதிரி வடிவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

காஞ்சிபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்டும் உத்தரகோசமங்கை ஸ்தலத்திலிருந்தும் யாழ்ப்பாணம் காரைநகர் ஐயனார் கோவிலுக்கு பூஜைக்காக குளக்கோட்டு மன்னனால் அழைத்து வரப்பட்ட ப்ராமணோத்தமர் பரம்பரையில் தோன்றிய எமது தகப்பனார் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள் கருணாகரேஸ்வரக் குருக்களது நூறாவது ஜயந்தியை முன்னிட்டு எமது வம்ச வரலாற்றை தற்காலச் சந்ததியினரும் ஏனையோரும் அறியும் வண்ணம் புத்தக வடிவில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சிஅடைகிறோம். எமது பாட்டனார் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்களிலிருந்து எமது வம்சத்தை முக்கியமாகக் கொண்டு, அத்துடன் காசி நகரைப் பூர்வீகமாகக் கொண்ட எமது தாயார் காமாட்சிஅம்மாவின் வம்ச வரலாற்றையும் இத்துடன் சேர்த்திருக்கிறோம்.

இவற்றுடன் ஸ்ரீசக்ர வழிபாடு செய்பவர்களின் வசதிக்காக சமஸ்கிருத பேராசிரியர் டாக்டர், பிரம்மஸ்ரீ கா. கைலாசநாத குருக்கள் எமக்குத் தந்துதவிய "மாலாமந்திரமும்" வேறு சில முக்கிய ஸ்தோத்திரங்களும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய ஸ்ரீவித்யா கணணி அச்சக அதிபரும் எமது சிறிய தாயாரின் புத்திரருமாகிய கோப்பாய் சிவம் அவர்களுக்கும் கோண்டாவில் சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ் உரிமையாளர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எமது தந்தையாரின் நினைவாக இந்நூலை பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

**– அமரர் கருணாகரேஸ்வரக் குருக்களது பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுத் திரையில்

# சிவஸ்ரீ இ.கு.கருணாகரேஸ்வரக் குருக்கள்

அவர்கள்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கியிருப்பதுவும் நன்று

என்ற ஔவைப்பாட்டியாரின் அமுதமொழிக்கிணங்க மட்டக்களப்பு கல்லடி உப்போடை நொச்சிமுனை வாழ் மக்கள் சுமார் நான்கு தசாப்த காலம் ஒரு பெரும் நல்லாரைக் கண்டனர். அன்னாரின் பயன்மிகு சொற்களைக்கேட்டனர். கேட்டு, அவர்தம் குணச்சிறப்பினைச் சொல்லும் வகையெல்லாம் எடுத்துரைத்து இறுமாந்து நின்றனர். அவையாவும் போதாதென்று ஆலயத்தை நண்ணி அவருடன் அளவளாவி அறிவுரைகளைச் செவிமடுத்துப் பேரின்பம் அடைந்தனர். இவற்றுக்கெல்லாம் காலாய் அமைந்தவர் மட்/கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்திவிநாயர் ஆலய அர்ச்சகராக விளங்கிய சிவஸ்ரீ இ.கு.கருணாகரேஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களே. அன்னார் ஓர் அன்பின் வடிவம், அருளின் உருவம், பண்பின் திருவுருவம்!.

ஐயா அவர்கள் பழமையும், பெருமையும் மிக்க அந்தணர் மரபில் உதித்தவர். சைவாகமக் கிரியை முறைகளை நன்கு கற்றுத் தேர்ந்தவர். கிழக்கிலங்கையில் பெயர் பெற்ற மேற்படி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் 1948ஆம் ஆண்டு முதல் 1989ம் ஆண்டுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41ஆண்டு காலம் அர்ச்சகராகப் பணிபுரிந்துள்ளார். இத்துணை நீண்டகாலம் ஒரே ஆலயத்தில் அதுவும் மூன்றுகாலப் பூசைகள் நடைபெறும் ஓர் ஆலயத்தில் சிறப்புறப் பணிபுரிவதென்றால் இலகுவான காரியமல்ல என்பதை யாவரும் அறிவோம். பல தரப்பட்ட மக்களுடனும் அளவளாவி அன்பும், பண்பும், ஆதரவும் காட்டிப் பணிபுரிவதென்றால் ஐயா போன்ற பண்பாளர்களால் மட்டுமே அது சாலும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் வள்ளுவர் வாக்கு குருக்களையா அவர்களுக்கு நன்கு பொருந்துவதாகும்.

குருக்கள் ஐயா அவர்கள் கடமையே கண்ணாகக் கொண்டவர். அதிகாலை 4.00 மணி ஆகிவிட்டால் போதும்! ஐயா துயில் எழுந்து தினசரிக் கடமைகளை ஆரம்பித்து விடுவார். 'கணீர்' என்ற அவரது வெண்கலக்குரல் அயலவரையெல்லாம் விழித்தெழச் செய்துவிடும். திருவாதிரை கால ஆராதனையின் போது ஐயா பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றுவார். கந்த சஷ்டி, விநாயகர் விரதம் போன்ற விரதகாலங்களில் புராண படனங்களைப்பாடிப் பயன்கூறவும் அவர் பின் நிற்பதில்லை. பாண்டி(பன்றி) வேட்டை உற்சவத்தின்போது அவர் துள்ளிக் குதித்து வேட்டையாடும் காட்சியை இன்றும் முதியோர் பலர் வீறாப்புடன் எடுத்துக் கூறுவதுண்டு. சுருங்கச் சொன்னால் கல்லடி உப்போடை, நொச்சிமுனை வாழ் மக்கள் இத்தகைய சிவநெறியாளரைத் தம் ஆலய குருவாகப் பெற்றமை மிகப்பெரும் பேறாகும் என்பதில் ஐயமில்லை.

காலத்தால் கரையாத தெய்வப் பணியாற்றிய குருக்கள் ஐயா அவர்கள் தமது 80வது வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள். இன்று மலரும் அன்னாரின் நூற்றாண்டு தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நாமும் இணைந்து கொள்வோமாக. அவர்களின் அப்பழுக்கற்ற சேவையை உளங்கொண்டு போற்றுவோமாக!

ஓம்! சாந்தி!

இ.துரைராசசிங்கம்,

ஓய்வு பெற்ற ஆசிரியர்,

218, பிரதான வீதி,

கல்லடி.

## எனது பெரிய தந்தையார்

எங்கள் குடும்பத்தில் எல்லாருமே சங்கீதப் பிரியர்கள். அப்பா பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களும் அம்மா இராசாத்தி அம்மாவும் நாங்கள் ஐந்து பிள்ளைகளுமே சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடும் இரசனையும் கேள்வி ஞானமும் உடையவர்களாயிருப்பதில் எமது பெரிய தந்தையார் அமரர் பிரம்மஸ்ரீ இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்களுக்கும் ஒரு பங்கு உண்டு.

'அந்தக் கால'த்தில் நீர்வேலியில் (எமது அம்மாவின் பிறந்த இடம்.) அம்மாவின் இளவயதுக் காலத்தில் அம்மாவின் மூத்த சகோதரியாகிய காமாட்சி அம்மாவின் கணவர் ஆகிய எமது பெரியப்பா கருணாகரேஸ்வரக் குருக்கள் வாசம் செய்த காலத்தில் 'பாட்டுப் பெட்டி' என அழைக்கப்படும் 'கிராம்போன்' கருவியும் இசைத்தட்டுக்களும் வைத்திருந்து கர்நாடக சங்கீத இசைத்தட்டுக்களை ஒலிக்கச் செய்வதில் விருப்பமுடையவராக இருந்தார். நாஸ்வர வித்துவான் இராசரத்தினத்தின் தோடியிலிருந்து காருக்குறிச்சியின் ........... வரை அம்மாவின் காதுகளில் விழுந்தமையும் எமது சங்கீத விருப்புக்குக் காரணம் என்பதை இங்கு குறிப்பிடலாம்.

- **கோப்பாய் சிவம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தந்தையார்

# பிரம்மஸ்ரீ இ. கு. கருணாகரேஸ்வரக்குருக்கள் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

பிரம்மஸ்ரீ இ. கருணாகரேஸ்வரக் குருக்கள் அவர்கள், யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட **இரத்தினசபாபதிக் குருக்களுக்கும்** திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அவரது மனைவி **கமலாம்பிகை அம்மா**வுக்கும் விரோதிகிருது வருடம் ஆவணி மாதம் 14ம் திகதி (31.08.1911) திருமலையில் பிறந்தார். பெற்றோருக்கு ஏகபுத்திரரான இவருக்கு மூத்த சகோதரி இருவரும், இளைய சகோதரி ஒருவரும் இருந்தனர்.

தமது ஆரம்பக்கல்வியைத் திருமலை இந்துக்கல்லூரியில் பெற்றார். பின் 1923ம் வருடம் தை மாதம் முதல் எமது பாட்டனார் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப்பொறுப்பு ஏற்றதனால் இ.கி.மி. விவேகானந்த வித்தியாலயத்தில் தமது உயர்கல்வியைப் பெற்றார். இக்காலத்தில் அப் பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்த திரு. த. வேலுப்பிள்ளை அவர்களிடம் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றையும் கற்று அதற்குப் பயன் சொல்லவும் பயிற்சி பெற்றார்.

பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்தபின் எமது பாட்டனாருக்கு உதவியாகப் பூஜைப் பணியினைச் செய்து கொண்டிருந்தார். 1931ம் ஆண்டு கார்த்திகை மாதம் எமது பாட்டனார் காலமானபின் தொடர்ந்தும் ஆலயப்பூஜைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். 1932ம் ஆண்டு ஆவணி மாதம் எமது பாட்டியும் காலமாகவே ஆலய பூசையைத் தனியே தொடர்ந்தும் செய்யமுடியாத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மூத்த அத்தையின் கணவர் (மாமா) **குமாரசாமி சர்மா** அவர்களிடம் பூசைப்பொறுப்பைக் கொடுத்துவிட்டு அத்தையுடன் காரைநகருக்கு சென்று அங்கு வாழ்ந்து வந்தார்.

இப்படியாக இருக்கும் நாளில் நீர்வேலி **தியாகராஜக் குருக்கள் இராஜலட்சுமி அம்மா** தம்பதிகளின் மூத்த புதல்வியான **காமாட்சி அம்மா**வை 1937ம் ஆண்டு மாசி மாதம் 6ம் திகதி திருமணம் செய்தார். அவர்கள் தமது இல்லற வாழ்வின் பயனாக **ஷடாட்சரசர்மா, கமலாம்பிகை, சுரேஸ்வரசர்மா, செந்திநாதசர்மா, மகேஸ்வரசர்மா, பத்மலோசனி** என்ற ஆறு பிள்ளைச் செல்வங்களை இவ்வுலகிற்கு ஈந்தனர்.

எமது தந்தையார், எமது தாத்தா தியாகராஜக் குருக்களுடன் சேர்ந்து சைவஆகமக்கிரியை முறைகளைக் கற்றுத் தேர்ந்து 1940ம் ஆண்டில் சுன்னாகம் சிவஸ்ரீ **சதாசிவக்குருக்கள்** அவர்களினால் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கப்பெற்றார். பின்னர் தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவிலில் ஆசார்யராகக் கடமையாற்றினார். 1946ம் ஆண்டில் திருமலை குச்சவெளிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தைத் திருமலை வில்லூன்றிக் கந்தசாமி கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ **பூரணானந்தேஸ்வரக் குருக்கள்** மேற்பார்வையில் நடத்தித் தொடர்ந்து சிலகாலம் அக்கோவிலிலே பூசகாராகவும் இருந்தார். இக்காலகட்டத்தில் பூரணானந்தேஸ்வரக் குருக்களிடம் சைவ ஆகமமக்கரியைகள் பற்றிய அறிவையும் அனுபவத்தினையும் ஐயந்திரிபறக் கற்றுத்தேர்ந்தார். பின்னர் வாகரைப்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தி அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் திருவாளர்கள் க. உ. வே. நமசிவாயம், கா. கந்தசாமி ஆசிரியர் ஆகியோரின் அழைப்பின் பேரில் 1948ம் ஆண்டு ஆனிமாதமளவில் மீண்டும் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குருவாகப் பொறுப்பை ஏற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லடி உப்போடையில் தனது ஆலயக் கடமைகளைச் செய்துவரும் வேளையில் தமது இல்லற தர்மத்தின் கடமைகளையும் மறவாது பிள்ளைகளாகிய எமக்குத் திருமணம் முதலியவற்றனைச் செய்துவைத்துப் பேரக் குழந்தைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் எமது பாட்டனாரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுப் பல காலங்கள் சென்றதால் தனது காலத்திலேயே ஆலய பாலஸ்தாபனத்தையும் செய்து தனது இயலாத நிலையிலும் 1988ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். இச்சந்தர்ப்பத்தில் தமது கடமையாகவும் இறுதி ஆசையாகவும் ஆண்மக்களாகிய எங்கள் நால்வருக்கும் ஆசார்யாபிஷேகத்தைச் செய்துவைத்துத் தன் வழியிலேயே நாங்களும் தொடர்ந்து செல்ல வழிவகுத்துத் தந்தார்.

எமது தந்தையார் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக ஆலயப் பொறுப்பினைத் தொடர்ந்து செய்யமுடியாத நிலையில் 15.03.1989 இல் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப்பொறுப்பிலிருந்து நீங்கினார். வயோதிபத்துடன் நோயும் சேர்ந்த காரணத்தினால் தனது 80வது வயதில் பிரசோற்பத்தி வருடம் வைகாசி மாதம் இரண்டாம் திகதி 16.05.1991 அன்று சிவபதமடைந்தார்.

- பிள்ளைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு, கல்லடி உப்போடை**

**பாரத்வாஜ கோத்ரம்,**

**அமரர், பிரம்மஸ்ரீ**

# இரத்தினசபாபதி ஐயர் கருணாகரேஸ்வரக் குருக்களின்

## வம்ச வரலாறு

ஆதாரம்

1. "ஆன்மதர்சனம்" யாழ்ப்பாணம் - காரைநகர் சிவன்கோவில் (ஈழத்துச்சிதம்பரம்) குருக்கள் பரம்பரையிலுள்ள ஏட்டுப்பிரதி. சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் வரலாறு

2. "காரைநகர் மான்மியம்" வித்வான் F.X.C. நடராஜா

திரு உத்தரகோசமங்கையென்னும் திருத்தலத்திலிருந்து மங்களேஸ்வர சுவாமிக்கு பூசை செய்கின்றவர்கள் இப்போ முப்பத்திரண்டு குருக்கள்மார் அந்த முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தரசேதுபதி மகாராசாவாகிய என்னால் ஒவ்வொரு செப்புப்பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்தில் எழுதப்படுகிற விஷயம் என்னவானால்:-

மங்களேசுவரர் துணை

கலியப்தம் நாலாயிரத்து நானூறு, சாலிவாஹன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பது, பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாம் திகதியும், திங்கட்கிழமையும் சோதி நக்ஷத்திரமும், பூர்வபக்க திரயோதசியும், மிதுனலக்னமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் ஏழுதப்படுகிற சாதனம்:-

திரு உத்தரகோசமங்கையென்னுந் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மங்களேசுவர சுவாமி கோயிலுக்கு இப்போது முதற் பூசைப் பங்காளராயிருக்கின்ற காஞ்சீபுரம் கலியாணசுந்தரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்கள் முதல் ஸ்தானிகராகவும், மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப்பங்கு முறைப்படி ஸ்தானீகரர்களாகவும் மகாராசாவாகிய என்னால் தத்துவங் கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும், செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது. மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகலவிதமான சாமான்களும் கஜானாப்போக்கு முதலிய திறவுகோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிற எல்லோரும் பூசை செய்கிறவர்களும், ஸ்தானீகர்களுமாக இருக்கிற குருக்கள்மார் கட்டளைப்படி நடக்க வேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்படவேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்களுக்கு கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் போல 32 பங்காகப் பகிர்ந்துகொள்ள வேண்டியது. இவர்களினால் ஒரு காலத்திலும் கிரயத்திற்குக் கொடுக்கப்படாது. வாங்குகிறவர் களுக்கும் இராசசபையிலே தண்டம் விதிக்கப்படும். மற்றப்பணிவிடை காரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப்பிரசாதம் அனுப்ப வேண்டியது. இந்தப்பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும், என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப் பங்காளராகவும், ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கள்மார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உருத்திராக்ஷம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப்பட்டயமானது மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்

சோமசுந்தர சேதுபதி மகாராசா

இதற்கு முதற்சாட்சி :- எனது முதலாவது மந்திரி, இராமசாமி
இரண்டாம் சாட்சி :- எனது முதலாவது சேனாதிபதி சொக்கலிங்கம்
மூன்றாம் சாட்சி :- எனது புரோகிதர் கிருஷ்ணசாமி ஐயர்

இந்தச் சாட்சிகள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முப்பத்திரண்டு குருமார்களுக்கும் கொடுத்தேன். அவர்களும் தங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்டார்கள்.

இராமநாதபுரத்திலேயுள்ள திரு உத்தரகோசமங்கை தேவ ஸ்தானத்திலேயும் ஒரு பட்டயமிருக்கும். இவ்வளவு விஷயங்களும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலேயே முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் எழுதிக் கொடுத்து இத்தோடு பட்டயமும் கொடுக்கப்பட்டது.

**இவ்வாறு உரிமைபெற்ற சிவசுப்பிரமணியக் குருக்கள் முதல் அவர்கள் பரம்பரையில் வந்த குருமார் யாவரும் தமது வரலாற்றை முறையாக ஏடுகளில் எழுதிவந்தார்கள். அந்த ஏடுகள் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதில் தொடரும் வரலாறு வருமாறு:**

காஞ்சீபுரத்திலே இருந்துவந்த கலியாணசுந்தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்களாகிய நான் இந்தச் சரித்திரத்தை எழுதத் தொடங்குகிறேன்.

எனது தகப்பன் கல்யாணசுந்தரக் குருக்கள் காஞ்சீபுரத்தில் இருக்கிறார். எனது தம்பிமாராகிய ஏகாம்பரக் குருக்கள், சபாபதிக் குருக்களும் காஞ்சீபுரத்திலேயே இருக்கிறார்கள். நான் திரு உத்தரகோச மங்கையென்னும் இடத்திலேயிருக்கிற சொக்க நாதக்குருக்கள் முதலாவது மகள் ஞானப்பூங்கோதை அம்மாளை விவாகம் செய்து இருபத்திரெண்டு வருஷகாலம் முதற் பூசைப்பங்காளராக இருந்து வருகிறேன். எனக்கு முதற்பூசைப் பங்கு வந்த காரணம் நான் விவாகஞ் செய்து முதல்முறை இராசசபைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனபொழுது இராசாவின்பேரிலே சம்ஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டுபோய் மகாராசா முன்பு வாசித்தேன். என்னோடு வந்த மற்றவர்கள் மகாராசாவின் பேரிலே ஒன்றும் வாசிக்கவில்லை. நான் வாசித்தவுடன் மகாராசா சந்தோஷப்பட்டு நீர் சம்ஸ்க்ருதம் நன்றாக வாசித்திருக்கிறீர். மற்றவர்கள் நன்றாக வாசித்ததாகத் தெரியவில்லை. ஆனதன்மையினால் நீரே இன்று முதலாக உத்தரகோசமங்கையிலுள்ள மங்களேசுவரசுவாமி கோயிலுக்கு முதற்பூசைப் பங்காளராக இருக்க வேண்டியது என்று சோமசுந்தர சேதுபதி மகாராசா சொன்னார்.

## எனது மகன் கார்த்திகேயக் குருக்கள்

கார்த்திகேயக் குருக்களின் புத்திரர் திருநீலகண்டக் குருக்கள் இவர் புத்திரர் நடராசாக் குருக்கள் இவர் புத்திரர் விசுவநாதக் குருக்கள்

விசுவநாதக் குருக்களாகிய எனது காலத்திலே முன்னே சொல்லப்பட்ட முப்பத்திரெண்டு குருக்கள்மார்களில் நாலுவீட்டுக்காரர் சந்ததியின்றி அழிந்து போனார்கள். இப்போ இருப்பவர்கள் இருபத்தெட்டு வீட்டுக்காரர்கள். பூசைப்பங்கையும் ஸ்தானீகர் வேலையையும் பார்த்து வருகிறோம்.

இப்படி பார்த்துவரும் காலத்திலே இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. இந்தக் கலகத்துக்குப் பயந்து எனது சிற்றப்பாமகன் வைத்தியேசுவரக் குருக்களும் நானும் எங்கள் பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் எங்களது அடுத்த பங்காளர் இரத்தினசபாபதிக் குருக்களிடம் ஒப்புவித்து விட்டு நாங்களிருவரும் எங்கள் சமுசாரமும் காஞ்சீபுரம் போய் அங்கே ஒரு வருஷம் வரையிலிருந்து மறுபடியும் திரு உத்திரகோசமங்கை வந்த பார்த்தபோது பதினாறு வீட்டுக்காரரைக்க காணவில்லை. இரத்தினசபாபதிக் குருக்களிடம் கேட்டபொழுது அவர் சொன்னார் பதின்மூன்று வீட்டுக்காரர் இன்ன இடம் போனார்களென்று தெரியவில்லை. மூன்று வீட்டுக்காரர் வைசூரியினாலிறந்துவிட்டார்கள் என்பதாகவும் சொன்னார்.

இரண்டு வருஷகாலம் பன்னிரண்டு வீட்டுக்காராருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வந்தோம். மறுபடி இராமலிங்க சேதுபதி மகாராசா முன்பாக நாங்கள் பன்னிரண்டு பேரும்போய் பூசையை விட்டுப் போனவர்களது பங்கையும் இறந்தவர்களது பங்கையும் பற்றிமுறையிட்ட பொழுது மகாராசா அவர்கள் சரிவரப் பன்னிரண்டு பங்காகப் பகிர்ந்து எங்களுக்குள்ளே வியாச்சியமில்லாமல் மங்களபுக்களம் முதலிய வயற் கிராமங்களையும் பன்னிரண்டு பங்காகவே பங்கிட்டுத் தந்தார். அந்த நாள்முதல் நாங்கள் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் நடத்தி வருகிறோம். இவ்வளவும் விசுவநாதக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்குவயது எண்பத்தாறு. எனது மகன் காங்கேயக் குருக்கள். விசுவநாதக் குருக்கள் புத்திரன் காங்கேயக் குருக்கள் புத்திரர் ஆதி சிதம்பரேசுவரக் குருக்கள். இவர் புத்திரர் பரமேசுவரக் குருக்கள். இவர் புத்திரர் பாலசுப்பிரமணியக் குருக்கள். இவர் புத்திரர் கனகசபாபதிக் குருக்கள். இவர் புத்திரர் வையாபுரிக் குருக்கள். இவர் புத்திரர் சுந்தரேஸ்வரக் குருக்கள். இவர் புத்திரர் குருசாமிக் குருக்கள். இவர் புத்திரர் மாணிக்கவாசகக் குருக்கள். இவர் புத்திரர் மங்களேசுவரக் குருக்கள்.

இவ்வளவும் எனது பிதாமஹர் குருசாமிக்குருக்களிடம் கேட்டு மங்களேஸ்வரக் குருக்களாகிய என்னாலேயே எழுதப்பட்டது.

எனது பிதா மாணிக்கவாசகக் குருக்களும் சுந்தரேசுவரக் குருக்களின் பிதா வையாபுரீஸ்வரக் குருக்களும் நாங்களிருவரும் சிறுவர்களாயிருக்கும்போது இறந்துவிட்டார்கள் எனது பிதாமஹர் குருசாமிக்குருக்களும் நாங்களிருவரும் எங்கள் பங்குகளைப் பார்த்து வருகிறோம். நாங்கள் விவாகம் செய்யுமுன் எனது பிதாமஹர் குருசாமிக் குருக்களும் இறந்துவிட்டார். மறுபடியும் நாங்களிருவரும் எங்கள் பங்குகளை மிக ஒழுங்காகப் பார்த்து வருகிறோம். சொற்பகாலம் சென்றபின் நாங்களிருவரும் விவாகம் செய்ய நினைத்துக் காஞ்சிபுரம் சென்று நான் கந்தராசாக் குருக்கள் 2வது புத்திரி உமையம்மாளையும் எனது மகன் முறையினானாகிய சுந்தரேசக் குருக்கள் கச்சியப்பக் குருக்கள் ஏக புத்திரி சேஷஅம்மாளையும் விவாகம் செய்து அவ்விடம் சொற்பகாலமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் உத்தரகோசமங்கை வந்து எங்கள் பங்குகளைக் கிரமமாகவும் ஒழுங்காகவும் நடத்தி வந்தோம்.

இப்படி நடக்கும் காலத்திலே இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. கலகமானது ஒருவருஷகாலம் தீராமலே நெடுகநடந்து கொண்டேயிருந்தது. இந்தக் கலகத்தை மங்களேசுவர சேதுபதி மகாராசாவினாலும் அடக்கிக்கொள்ள முடியவில்லை. நாங்களும் கலகத்திற்குப் பயந்து மங்களேசுவர சேதுபதி மகாராசாவிடம் முறையிட்டபோது அவர் கவனிக்கவில்லை. நாங்கள் சொல்லியதை மகாராசாவும் கவனியாதபடியால் நாங்களொருவகையாலும் இங்கேயிருந்து பூசைசெய்ய முடியாதவர்களாயிருக்கிறோம். சொற்ப காலம் இந்த தேசத்தைவிட்டுக் கலகந் தீர்ந்தபின் மறுபடி வருவோமென்று மனதில் நினைத்துக் கொண்டு நாங்கள் நாலுவீட்டுக்காரரும் (மங்களேஸ்வரக் குருக்கள் ஆகிய நானும் சுந்தரேஸ்வரக் குருக்களும் அருணாசலக் குருக்களும் இராமலிங்கக் குருக்களும் ஆகிய நாலு வீட்டுக் காரரும்) மற்ற எட்டுக் குருக்கள்மார்வசம் எங்கள் பூசையை ஒப்புவித்துவிட்டு, நாங்கள் நாலுபேரும் மற்றக் குருக்கள்மாரறியாதபடி எங்களிடத்திலேயிருந்த ஆபரணம் முதலிய சாமான்களெல்லாவற்றையும் மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலேயிருக்கின்ற போக்கிலே அடக்கம் செய்து போக்கை கபாடபந்தனம் செய்துகொண்டு கோயில் மகாமண்டபத்தில் ஈசானியபாகத்தில் இருக்கும் தூணில் துவாரம் செய்து அதில் திறவுகோலை வைத்து அதன்மேல் அரக்குவைத்து அதில் யானைக்காசு முத்திரை செய்து வைத்துப்போட்டு, நானுமெனது சமுசாரமும் சுந்தரேசக் குருக்களும் அருணாசலக் குருக்களும் இராமலிங்கக் குருக்களும் அவரவர் சமுசாரமும் பிள்ளைகளும் சுவாமிதரிசனம் செய்து அவ்விடத்தை விட்டு நீங்கினோம்.

அவ்விடத்தைவிட்டு நீங்கும்பொழுது எங்களெல்லோருக்கும் மனதிலே மிகுந்த துக்கமும் அழுகையுமாகவே இருந்தன. பிரயாணமாய் தெற்பசயனம் வந்து வெற்றிலை மண்டபம் அடைந்து இராமேசுவரம் வந்து ஆறுமைல் தூரமுள்ள சேதுவையடைந்து சங்கற்பமுடன் ஸ்நானம் செய்து கந்தமாதனத்தை தரிசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதுமாதவரையும் சேதுகாவலனையும் தரிசித்து வருகையில் சுந்தரேசுவரக் குருக்கள் மனைவி சேஷம்மா வைசூரியாலிறந்து விட்டாள்.

சுந்தரேசுவரக் குருக்கள் புனர்விவாகம் செய்ய மனமில்லாதவராய் இருந்தார். ஆறுமாதம் வரையில் இராமேசுவரத்தில் இருந்தோம். அப்போது உத்தரகோசமங்கையில் கலகந்தீரவில்லை. எவ்விடம் போகிறதென்றும் தெரியாமல் அதிக மனவியாகூலமாயிருக்கையில் வித்துவசிரோமணியும் சைவசமயப் பிரபுவும் திவானுமாகிய ஒருவரைக் கண்டோம். ஒருவருக்கொருவர் யோகக்ஷேமங்களையும் ஊர் பெயரையும் விசாரித்தோம். வித்துவசிரோமணியும் சைவசமயப் பிரபுவுமாகிய தனவான் தன்னுடைய பெயர் முத்துமாணிக்கஞ் செட்டியார் எனவும் தாமிருப்பது யாழ்ப்பாணமெனவும் சொன்னார். யாழ்ப்பாணமென்ற தேசம் எந்த ஜில்லாவிலேயுள்ளதென விசாரித்தேன். அவரதற்கு இராவணனால் இராச்சியஞ் செய்த இலங்கையிலே வடக்குப் பக்கத்திலேயுள்ள ஓர்தேசம் யாழ்ப்பாணம் என்றும் பெயர் வரக்காரணம்.

இந்தியாவாகிய இங்கே சோழதேசத்திலே தொண்டைநாட்டிலுள்ள கவிவீரராகவனென்னும் குருடன் தனது மனைவியோடு கோபித்துக் கொண்டு இலங்கையிலே மணற்றியென்னும் இடத்திலேயிறங்கி செங்கடக நகரிலே இருக்கின்ற செய்துங்க வரராசிங்கனெனப் பெயரையுடைய ராசனது சபையையடைந்து இராசாவின் பேரிற்பாடி அந்தப் பிரபந்தத்தை முடித்தான். இராசா யாழ்ப்பாடியின் பேரில் சந்தோஷப்பட்டு அவனுக்கு மணற்றியென்னும் இடத்தையும் யானை, குதிரை பல்லக்கு முதலிய சாமான்களையும கொடுத்தனுப்பினார். யாழப்பாடி அரசனுக்கு பல ஆசிகூறி அவற்றைப் பெற்றுக்கொண்டு மணற்றியயடைந்து மணற்றியெங்கும் சுற்றிப்பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே பாணன் என்னும் குளத்தையும் வெட்டுவித்து அவ்விடத்தில் ராச்சியத்தை நடத்தினான். தான் பரிசாகப் பெற்ற இடத்திற்கு "யாழ்ப்பாணம்" என்னும் பெயரை வைத்து அரசாட்சி செய்தான்.

அந்த யாழ்ப்பாணத்திற்கு வடமேற்குப் பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலேயுள்ள ஊர்காவற்றுறைக்குச் சமீபமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ இருக்கிறவர் ராமசேது மகாராசாவின் மகன். இவ்வரசன் இருந்த இடம் இப்பொழுதும் இராசாவின் தோட்டம் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. குளக்கோட்டு மகாராசாவினால் வியாவில் என்னுமிடத்திற் கட்டப்பட்ட ஐயனார் கோயில் பூசைக்கு குருக்கள்மாரை அழைத்துவரும்படி குளக்கேட்டு மகாராசா என்னை யனுப்பினார். குருக்கமாரை அழைத்தற்கு வந்து சோந்தேன். என்று சொல்லியதைக் கேட்ட நான் யாழ்ப்பாணம் போவதே நல்லதென்று மகதிலே தீர்மானஞ் செய்து கொண்டு என்னோடு வந்த மூவரையும் கேட்டேன். கேட்டதற்கு அருணாசலக் குருக்களும் இராமலிங்கக் குருக்களும் தாங்கள் யாழ்ப்பாணம் வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். சுந்தரேஸ்வரக் குருக்கள் என்னோடு யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னார். முத்துமாணிக்கஞ் செட்டியாருக்கு நான்சொல்லியது என்னவானால் நாங்களிருவரும் சம்சாரசகிதமாய் உம்மோடு யாழ்ப்பாணம் வருகிறோம். நீர் வேறோரிடமும் குருக்கள்மாரையழைக்கப் போகவேண்டாம் என்று சொல்லியதை முத்துமாணிக்கஞ் செட்டியார் கேட்டு மிக சந்தோஷப்பட்டு நான் உங்களையே அழைத்துப் போவதாக மனதிலே நினைக்க நீங்களாகவே யாழ்ப்பாணம் வருகிறோமென்றது எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனபடியால் காவிரிப்பூம் பட்டினத்திலேயுள்ள எனது தாய் தந்தையரது தபத்தினாலும் இராமலிங்கப் பெருமானுடைய அனுக்கிரகத்தினாலும் நான்கு குருக்கள்மாருக்கு தேடித்திரிந்து அலையாமல் நீங்கள் வருகிறோமென்று சொல்லியது மிகச் சந்தோஷம். நான் காவிரிப் பூம்பட்டினத்திற்குப் போய் எனது தாய் தந்தையரைக் கண்டு வருகிறேன். அதுவரையிலும் நீங்கள் இவ்விடத்திலிருக்கலாம் என்று சொன்னார். எங்களுக்கு தான் வருமளவும் செலவுக்குக் காசு தந்துவிட்டுப் போய்விட்டார். போய்த் தனது ஊரிலே இரண்டு மாசம் வரையில் நின்று மறுபடி இங்கே வந்தார். வந்தவுடன் சுந்தரேசக் குருக்களை புனர்விவாகஞ் செய்து கொண்டே யாழ்ப்பாணம் வரமேண்டுமென்று சொன்னார். அதற்கவர் சம்மதியாமல் மறுத்தார். நானும் செட்டியாரும் சொல்லியது நீர் கட்டாயம் விவாகம் செய்ய வேண்டியது என்று சொல்லி நானே விவாகச் செலவைத் தருகிறேனென்றும் செட்டியார் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரேசுவரக் குருக்களும் இதற்குடன்பட்டு செட்டியாரிடம் காசு வாங்கிக்கொண்டு நானும் எனது சமுசாரமும் சுந்தரேஸ்வரக் குருக்களும் திருவையாற்றுக்குப் போய் அங்கே பஞ்சநதேஸ்வரக் குருக்களின் இரண்டாவது புத்திரி அமிதாம்பிகை அம்மாளை விவாகம் செய்து அவ்விடம் ஒரு மாசம் வரையிலிருந்து மறுபடி இராமேசுவரம் வந்தோம்.

செட்டியாரைக்கண்டு யாழ்ப்பாணம் எப்போ போவது என்று கேட்டேன். அதற்கவர் பரிசாரகப் பிர்மணரைச் சம்பாதித்துக் கொண்டு புறப்படுகிறதென்று சொன்னார். நான் மனதிலே யோசனை செய்து உத்தரகோசமங்கையிலே கலகமிருக்கிறபடியால் அங்கே போனால் பரிசாரகப் பிராமணரைக் கொண்டு வரலாமென்று சொன்னேன். அதைச் செட்டியார் கேட்டு நீங்களுமென்னுடன் வந்தால் இலகுவிற் கொண்டு வரலாமென்று சொன்னார்.

நானும் செட்டியாரும் உத்தரகோச மங்கை போய் அங்கேயுள்ள நாலு வடகலை வைஷ்ணவப் பிராமணர்களை சம்சாரத்தோடு அழைத்துக்கொண்டு இராமேசுவரம் வந்தோம்.

செட்டியார் எங்களெல்லாரையும் எங்கள் விடுதியில் விட்டு எங்களுக்குச் செலவுக்கு ரூபாய் தந்துவிட்டு சேதுவிலே போய்த் தீர்த்தமாடிக் கந்தமாதனத்தைத் தெரிசித்து இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தனி அம்பாளையும் தெரிசித்து வந்து எங்கள் விடுதியிலே இருந்தார். இரண்டு நாள் சென்றபின் யாழ்ப்பாணம் போவோமென்று யோசனை செய்தார். அப்படி யோசனை செய்து கொண்டிருக்கும்போது முத்துமாணிக்கம் செட்டியார் ~~கப்பலில்~~ கொழும்பு சென்றிருந்த தைரிய லட்சுமி என்ற பெயர் தரித்த கப்பல் பாம்பன் வந்துவிட்டதாக மாலுமி வழியாலறிந்து சந்தோஷமடைந்து என்னோடு நாங்களினி யாழ்ப்பாணம் போவதற்கு புறப்படுவோமென்று சொன்னார். நானுமதற்குடன்பட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் சமுசாரம் வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் அவர்களின் சமுசாரங்களும் பாம்பனையடைந்தோம்.

செட்டியாரும் அவர் சமுசாரமும் பிள்ளைகளும் அவர்களது தேசத்திலிருந்து கொண்டுவந்த விக்கிரகங்களையும் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பனையடைந்தார். எல்லோரும் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலை ஏழு மணிக்குக் கப்பலில் ஏறிப் பிரயாணமாய் சேதுக்கரையைக் கண்டு அதுமறைந்தபின் கச்சதீவு கண்டு அது மறையபின் சஞ்சீவியென்னும் பொற்சீந்திலையுடைய நீடித்த ஆயுளைத் தாங்கும் மானிடரைப் பெற்ற பூமியாகிய நெடுந்தீவு கண்டு அது மறைய நாகர்தீவு பப்பரவாகன் சல்லியன் குடியில் எழுந்திருக்கும் நாகபூஷணி அம்பாள் கோயிலில் கோபுர சிகரத்தையும் நாகஞ்சுற்றிய கல்லையும் கண்டு பின் நாகேசுவரன் கோயிலைக்கண்டு அதன்பின் அனலைதீவு கண்டு பின் ஏழுகடல் ஒருமித்துச் சேரும் சுழிக்குப் பாகமாயிருக்கும் எழுவைதீவு கண்டு அதன்பின் பவளப் பூச்சிகளாலும் வருணராசன் முருகைக்கற்களாலும் உண்டுபண்ணிய காரைதீவு கண்டு ஊர்காவற்றுறை என்னும் துறைமுகத்தையடைந்து கப்பலை விட்டிறங்கினோம்.

ஊர்காவற்றுறையிலே நின்றுகொண்டு செட்டியாரவர்கள் எங்கள் வரவையும் தனது வரவையும் ஏவலாளர்களால் இராசாவுக்கு அறிவிக்க அரசர் சதுரங்க சேனையுடன் செட்டியாரையும் எங்களையுமடைந்து எங்களை முத்துப்பல்லக்கிலும் தானும் செட்டியாரும் முத்துச் சிவிகையிலும் அமர்ந்து சதுரங்க சேனைகளுடன் சகல வாத்தியங்களுடனும் இராசமாளிகையை அடைந்தோம். எங்களை முத்துப்பல்லக்கிலிருந்து இறங்குபடி செய்து தாங்களுமிறங்கி இராசமாளிகையை அடைந்து எங்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வேண்டிய திரவியங்களையும் தந்து மறுபடியும் எங்களை முத்துப்பல்லக்கிலேற்றி தாங்களும் முத்துச் சிவிகைகளிலேறி "வியாவில்" என்று வழங்கும் பதியையடைந்து புதிதாய்க் கட்டப்பட்ட ஐயனார் கோயிலுக்கு ஈசான்ய பாகத்தில் எங்களுக்காகவும் கட்டப்பட்ட மடவளாகத்திலே எங்களை இறக்கித் தாங்களும் இறங்கி, நாங்கள் ஸ்நானம் பூசை போசனம் முடிந்தபின் அவர்கட்குமன்னம் கொடுத்து அவர்கட்கு வேண்டிய உபசரணைகள் செய்து அனுப்பினோம். சில நாட்கள் சென்றபின் இராசா எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னார். நாங்களிருவரும் இராசசபையையடைந்து அரசர் முன்பாக இருந்து அதாவது முதல் நாளிகேரத் தாடனம் பண்ணினோம். நாளிகேரதாடனம் பண்ணும்போது கௌளி சொல்லியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரிச்சாத்திரம் பார்த்தோம். அது நல்லாயிருக்கவில்லை. கெவுளியின் பலனை அரசர்க்குச் சொன்னோம். இராசாவும் இன்றைய தினத்தைவிட்டு இன்னொரு நாளைக்கு முகூர்த்தம் வைப்போமென்று எங்களை அனுப்பிவிடடார்.

ஒருமாசம் சென்றபின் மறுபடியும் எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச்சொன்னார்கள். நாங்களுமவ்விடம் போய் அரசர் முகதாவில் முகூர்த்தம் வைக்க ஆரம்பித்து நாளிகேரதாடனம் செய்தோம். நாளிகேரம் கவிழ்ந்து போய்விட்டது. அதையும் அரசர்க்கறிவிக்க அரசர் வெகுவாய் யோசனை செய்துவிட்டு, கோயில் கட்டி வெகுகாலமாகிவட்டது. ஆனபடியால் கும்பாபிஷேகம் செய்யாமலிருக்கிறதே துர்சகுனமாய் வந்தது போலும். ஆனபடியால் முகூர்த்தம் வைப்பதே நல்லது. மறுபடி ஒரு தேங்காயை எடுத்து உடைத்து வைத்து முகூர்த்தம் வைக்கத் தொடங்கினோம். அதாவது பிரபவாதி 35 பிலவ வருடம் வைகாசி மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமையும் திருவோண நட்சத்திரமும், சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்திலே செய்யலாமென்று சொன்னோம். அதை இராசா கேட்டு முத்துமாணிக்கஞ் செட்டியாரை ஸ்தானிகராய் நியமித்து அவர் விருப்பப்படி கும்பாபிஷேகத்தைச் செய்யும்படி சொன்னார்கள்.

முத்துமாணிக்கஞ் செட்டியாருமிதற்குடன்பட்டு எங்களால் வைக்கபட்ட முகூர்த்தத்திலேயே கும்பாபிஷேகத்தைச் செய்து பூசை உற்சவம் முதலியவைகளையும் கிரமமாய் நடத்தி வந்தோம். வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகஞ் செய்ததினம் கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றுமூன்று, சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைந்நூற்றுப் பதினெட்டு (கி.பி 1661) பிரபவாதி வருஷம் முப்பந்தைதாவது பிலவ வருடம் வைகாசி மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சொற்பகாலம் சென்றபின் மகாராசா அவர்களால் எங்களிருவருக்கும் செப்புப்பட்டயம் தரப்பட்டது அந்தச் செப்புப்பட்டயமாகிய சாசனத்திலே எழுதிய வாசகம்:-

இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பக்கமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலே "வியாவில்" என்னுமிடத்தில் இந்தியாவில் காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்து வந்து இப்போ காரைதீவிலே ஊர்காவற்றுறையில் இருக்கிற வரராமசேது மகாராசா மகன் குளக்கோட்டு மகாராசாவாகிய என்னால் முதற்சொல்லிய இடத்திற் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்கு பூசகராயிருக்கிற திரு உத்தரகோச மங்கையிலிருந்து என்னால் அழைக்கப்பட்ட மங்களேசுவரக் குருக்களுக்கும் (சுந்தரேசக் குருக்களுக்கும்) எழுதுகிற சாதனம்.

கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றைந்து சாலிவாஹன சகாப்தம் ஆயிரத்தைந்நூற்றிருபது (கி.பி.1663) பிரபவாதி வருஷம் முப்பதேழாவது சோபகிருது வருஷம் சித்திரை மாசம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரம் கூடிய சுப முகூர்த்தத்தில் எழுதிய சாதனம்.

மேலே சொல்லப்பட்ட குருக்கள்மார் இருவருக்கும் தங்களிஷ்டப்படி நித்திய, நைமித்தியம், காமியம் முதலிய சகல கிரியைகளையும் செய்யவும் செய்விக்கவும் புராணம் வாசிக்கவும் முத்து மாணிக்கஞ் செட்டியாருக்குப் பிறகு ஸ்தானிகராகவும் கோயிலுக்குரிய சகல காரியங்களையும் செய்கிறவர்களாகவும் தங்களிஷ்டப்படி செய்விக்கிறவர்களாகவும் தத்துவம் பெறுகிறார்கள். இத்தத்துவமானது என்றும் எனது சந்ததியாராலும் அழிக்கப்படாது. குருக்கள்மாருக்கும் அவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் மேலே சொல்லிய தத்துவமானது குளக்கோட்டு மகாராசா என்னும் பெயரையுடைய நான் எனது கையொப்பமிட்டுக் கொடுக்கிறேன்.

எனது கையொப்பபம்:- குளக்கோட்டு மகாராசா
முதலாஞ் சாட்சி :- சி. முத்துமாணிக்கஞ் செட்டியார்
இரண்டாஞ் சாட்சி:- வைத்தியநாதபிள்ளை இராமுப்பிள்ளை
மூன்றாம் சாட்சி :- நாராயணபிள்ளை கந்தப்பிள்ளை

இவர்கள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதிமுடித்த ஒரு பிரதியை நான் எடுத்துக் கொண்டு மற்ற இரண்டையும் இரண்டு குருக்கள்மாரிடமும் கொடுத்தேன். அவர்களும் தங்கள் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசா அவர்கள் தந்த செப்புப்பட்டயத்தை நாங்கள் பெற்றுக்கொண்டு கோயிற்பூசையையும் மிக ஒழுங்காய் நடத்தி வந்தோம். சொற்பகாலஞ் சென்றபின் எனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். முதலாவது புத்திரி மங்களாம்பிகை அம்மாள் இரண்டாவது புத்திரன் சூரிய நாராயணக் குருக்கள். மறுபடியுமிருவரும் பூசைசெய்து கொண்டு வந்தோம். எனது மகளுக்கு விவாகஞ் செய்கிறதற்கு இந்தியாவிற்குப்போய் இராமநாத புரத்திலேயுள்ள சொக்கநாதர் கோயிலர்ச்சகர் வேதாரணியேசுவரக் குருக்களின் இரண்டாவது மகன் சேதுமாதவக் குருக்களுக்கு நமது பெண்ணை விவாகஞ் செய்துவிட்டு வந்தேன். மறுபடியும் சிறிது காலஞ்சென்றபின் சுந்தரேசுவரக் குருக்களைப் பூசைக்கு வைத்துவிட்டு நானும் எனது மனைவியும் மகனும் இந்தியாவுக்குப் போய் இராமநாதபுரத்தையடைந்து மகளையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு கும்பகோணம்போய் உத்தரகோச மங்கையிலிருந்து என்னோடு புறப்பட்டுப்போன அருணாசலக்குருக்கள் மூன்றாம் புத்திரி ருக்குமணியம்மாவை (மகனுக்கு) விவாகஞ் செய்து அவ்விடம் இரண்டு மாதம் வரையிருந்தோம்.

எங்களோடு உத்தரகோசமங்கையிலிருந்து புறப்பட்ட இராமலிங்கக் குருக்கள் எவ்விடம் போனாரென்று அருணாசலக் குருக்களைக் கேட்டேன். அவரதற்கு எனது சம்சாரம் கும்பகோணத்திலேயுள்ளது. நான் இங்கே வந்து விட்டேன். அவரது தாய் செருத்தணியிலே உள்ளவர். அவரும் சம்சாரமும் பிள்ளைகளும் அங்கே போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.

மறுபடி நானும் சம்சாரமும் மகளும் மருமகனும், மகனும் மருமகளும் கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டு இராமநாதபுரம் வந்து அங்கே மகளையும் மருமகளையும் அனுப்பிவிட்டு நாங்கள் நால்வரும் யாழ்ப்பாணம் வந்தோம். இங்கே வந்து எங்கள் பூசைப் பங்கையும், ஊர்காரியங்களையும் நானும் எனது மகனும் பார்த்து வந்தோம். சுந்தரேஸ்வரக் குருக்களும் எங்களோடு ஒற்றுமையாய் தனது பங்கைப் பார்த்து வருகிறார். இப்படியாக இருபத்தைந்து வருடங்களாக பார்த்து வருகிறோம். இவ்வளவும் மங்களேஸ்வரக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு இப்பொழுது வயது அறுபத்தெட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நாங்கள் மூவரும் பூசையும் ஊர்க்காரியங்கயையும் பார்த்து வந்தோம். சில வருஷம் சென்றபின் எனது பிதா மங்களேஸ்வரக் குருக்கள் இறந்துவிட்டார். நானும் எனது தாயாரும் கோயிற்பூசை செய்து வரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய்விட்டது. முத்து மாணிக்கஞ்செட்டியாரும் இறந்துவிட்டார். போர்த்துக்கீசர் எனும் பறங்கியர் கிறிஸ்து வருஷம் 1618 ஆண்டு காலயுத்தி வருஷம் ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள். (யாழ்ப்பாண வைபவமாலை - பக் 78)

அனேக சைவக் கோயில்களை இடித்துப் போட்டார்கள். இங்கேயுள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுரவாசலிற் கதவைத் திறக்கப் போனார்கள். அவர்கள் வாயிலிருந்து இரத்தம் புறப்பட்டு இறந்து விட்டார்கள். அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வரவில்லை

பறங்கியரசு வந்து ஒரு வருஷத்தின் மேல் பெரிய அம்மை நோய் வந்தது. அந்த நோயால் ஊர்களிலனேகம் பேர் இறந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் எனது தமையனார் சுந்தரேஸ்வரக் குருக்களும் அவர் மனைவியும் இறந்து விட்டார்கள். இங்கே வேறு குருமார் ஒருவருமில்லை. நானும் வடகலை வைஷ்ணவப் பிராமணருமாக இருந்தோம். சுந்தரேஸ்வரக் குருக்களுக்குப் பிள்ளையில்லாதபடியால் அவரது சந்ததி அவ்வளவில் அற்றுப் போயிற்று. அம்மைநோய் அகலுவதற்காக முத்துதாண்டவரென்பவர் மணற்காடு என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் முத்துமாரி ஆலயத்தை ஒரு மாசத்திற் கட்டிமுடித்து என்னைக் கொண்டு கும்பாபிஷேகஞ் செய்வித்துத் திருவிழா, வேள்வி முதலியவைகள் செய்து முடிய அம்மை நோயும் குறைந்து விட்டன. பறங்கிகள் தங்கள் சமயத்தின்படி எத்தனையோ ஆராதனைகள் செய்தும் நோய் குறையவில்லை. ஆனபடியால் நாங்கள் செய்த வழிபாட்டைத் தடுக்கமுடியவில்லை. ஐயனார் கோயிற்பூசையையும் மாரியம்மன் கோயிற் பூசையையும் நானே செய்து வருகிறேன். சொற்பகாலம் சென்றபின் எனக்குக் கனகசபாபதிக் குருக்கள் பிறந்தார். பறு[illegible]தம் என்றும் பெண் பிள்ளையும் பிறந்தது. இவ்வளவும் சூரிய நாராயணக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் மகாதேவக்குருக்களை மணஞ்செய்து வைத்தேன். நானும் அவரது

எனது தகப்பன் சூரிய நாராயணக் குருக்கள் இறக்கும்போது நானும் எனது சகோதரியும் தாயும் பரிசாரகப் பிராமணர்களுமே அன்றி வேறோருவரும் காரைதீவில் இல்லை. நானே இரண்டு கோயிற் பூசையும் செய்து வந்தேன். கொஞ்சக் காலத்தின் பின் எனது சகோதரிக்கு கீரிமலையில் உள்ள சுப்பிரமணியக் குருக்களின் மகள் பார்வதி அம்மாளை விவாகஞ் செய்தேன். நானுமெனது மைத்துனனுமாக இங்கேயேயுள்ள கோயிற் பூசைகளையும், ஊர்க் காரியங்களையும் பார்த்து வந்தோம். பினனர் போர்த்துக்கீச ராச்சியம் போய் ஒல்லாந்து ராச்சியம் வந்தது. அவர்கள் கிறீஸ்து வருஷம் 1658ம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காவற் றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாதத்திற்குள் அனேக சைவக் கோயில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோயிலையும் இடிக்க வந்தபோது நாலுபேர் கண்தெரியாதவர்களாயும், இருவர் கால் நடக்க மாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்ச காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போன பிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய் பூசை செய்து வரும்போது ஒரு நாள் வந்து கோயிலையும் இடித்து கடலுக்குள்ளேயே ஓர் கோட்டையும் கட்டினார்கள்.

அதன் பின் நில அறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதையறிந்து சுவாமியெல்லாவற்றையையும் கோயில் சமான்கள் சகலதையும் கிணற்றுக்குகுள்ளே போட்டு “வீரன்” என்பவனையும் வெட்டிப் பலிகொடுத்துப் போய் விட்டார்கள். தேரையும் வாகனங்களையும் கடலிலே விட்டுவிட்டார்கள். ஆபரணங்கள் எல்லாவற்றையையும் எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதால் அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து “தாமன்” என்னும் பெயர் வைத்துப்போய் விட்டார்கள். குருக்கள் என்னும் பெயர் வைக்கப்படாதெனவும் சொன்னார்கள். எங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றிமற்ற மற்றச் சாதியில் இருக்கப்படாதெனவும் சட்டம் வைத்திருந்த படியால் எங்களுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கிரியைகளை இரகசியமாய் முடித்து "தாமோதரஐயர்" எனப்பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.

சைவசமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற் கேட்கப்படாது. விபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுவித்து வேலை செய்து பொழுதுபோன பின் வீடு வந்து இரகசியமாய் வீட்டுக்குள்ளேயேயிருந்து பூசை முதலியவைகளை முடித்து பின்பே சாப்பிட வேண்டும். இந்தக் கொடுமைகளைத் தாங்க ஏலாது பரிசாதகத்துடுக்கு வந்த வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் சமுசாரமும் பிள்ளைகளும் இந்தியாவிற்குப் போய் விட்டார்கள்.

நான் "வியாவில்" என்னுமிடத்தை விட்டு "மணற்காடு" மாரியம்மன் கோயிலடியில் வந்து இருந்தேன். மாரியம்மன் கோயிலையும் இரண்டுமுறை இடிக்க வந்தும் அம்மை நோயின் பயத்தால் இடிக்காமல் போய்விட்டனர். என்னையும் பூசைசெய்யக் கூடாதென தடுத்தனர். நான் ஒருநேரப் பூசை தவறினாலும் முத்துமாரி அம்மை வருவிப்பாள். அதறகுச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கேயன்றி இங்குள்ள மற்றவர்களுக்கு அம்மை வந்ததில்லை. இந்தக் கோயிற்பூசைக்காகவே நான் இங்கே இருக்கின்றேன். அல்லாவிடின் இந்த ஊரை விட்டுப்போய்விடுவேன் என்று சொல்ல ஒன்றும் பேசாது போய் விட்டார்கள்.

பின்னால் என் மகனுக்கு விவாகஞ் செய்ய நினைத்து கீரிமலையில் உள்ள எனது சகோதரியின் மகள் நாராயணி அம்மாளை விவாகம் முடித்து நானும் மகனுமாய்ப் பூசை செய்து வந்தோம். அந்த நாளில் மாரியம்மன் கோயில் கட்டிய முத்துத் தாண்டவ முதலியார் மகன் இராசரத்தின முதலியார் அவர் மகன் வரராசசிங்க முதலியாரால் எனது மகனுக்கு ஓர் உறுதி எழுதப்பட்டது. அவ்வுறுதி எப்படியெனில் 1749ம் ஆண்டு பங்குனி மாதம் திங்கட்கிழமை பூரவபக்கத் திருதியையும், சோதி நட்சத்திரமும் கொண்ட சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாசனத்தின் வாசகம் மேற்குறித்த ஐயமார்களே தங்களிஷ்டப்படி இந்தக் கோயிலிலே புராணம் வாசிக்கவும் பூஜை திருவிழா நடத்தவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி செய்யவும் அதிகாரமுடையவர்களாயிருக்கிறார்கள். இக்கோயில் ஆராதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தை குறித்த ஐயர்மாரே ஏற்று அதை அக்கோயிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகார முடையவர்களாக இருக்கிறார்கள். இவ்வதிகாரமானது இவருக்கும் இவர் சந்ததி உள்ள வரைக்கும் சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் வரராசசிங்க முதலியாராகிய என்னால் தாமோதர ஐயருக்கு கொடுக்கப்பட்டது.

வரராசசிங்க முதலியார் கையொப்பம்
சாட்சிகள் சங்கரன் சேதுவன்
சங்கரன் கதிர்காமன்

இந்த உறுதி எழுதிமுடித்த சிறிது காலத்தின் பின் எனது மகனுக்கு பிள்ளைகள் பிறந்தன. முதலாவது மகன் கண்டோபண்டிதஐயர்.

ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். எனது மூத்த பேரனுக்கு மேருகிரி ஐயருடைய வம்சத்திலே உள்ள கணபதி ஐயருடைய மகள் உமை அம்மாவை விவாகம் செய்து வைத்தேன். இவ்வளவும் கனகசபாபதிக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எழுபத்திரண்டு.

எனது பேரன் தாமோதர ஐயர் அவருடைய பிள்ளைகள் ஐந்துபேர். அவருடைய முதல் மகன் கண்டோபண்டித ஐயராகிய எனது தகப்பன். மற்ற நால்வரில் இரண்டாவது மகன் புங்குடுதீவுக்கும் மூன்றாவது மகன் சுன்னாகத்திற்கும் (மயிலணி) நாலாவது மகன் அராலிக்கும் ஐந்தாவது மகன் இணுவிலுக்கும் போய்விட்டார்கள். எனது தகப்பன் காலத்திலே ஒல்லாந்து ராச்சியம் போய் இங்கிலீசு ராச்சியம் 1795ல் வந்து விட்டது. எனது தகப்பனாருக்கு எனது பிதாமகர் கனகசபாபதிக் குருக்கள் விவாகம் செய்து வைத்தார். எனது தகப்பனாருக்கு நாலு பிள்ளைகள்.

(1) முத்தையர்
(2) இரங்கையர்
(3) சுப்பையர்
(4) தெய்வதயானை அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

